1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ப. ஜீவானந்தம் அவர்களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிடப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போலவே ஆர்வம் உண்டு. திரு. பன்னீர்செல்வம் அவர்களைப் பற்றிய கேள்விக்கு விடையளித்ததையொட்டி, அந்த முயற்சியின் தொடர்பாக இந்த முயற்சியும் மேற்கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: தொழிலாளர்களுடைய தலைவர் களில் மிக முக்கியமான தியாகி திரு. என். ஜி. ராமசாமி அவர் களுடைய நினைவாகத் தபால் தலை வெளியிட அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படி வரிசையாக ஒவ்வொருவரும் தபால் தலை வெளியிடவேண்டும் என்று கோரும் போது, நிலைமை என்னவென்றால், இப்போதே அங்கு இந்த ஆண்டு தபால் தலைகள் வெளியிட வேண்டுமென்று 174 கோரிக்கைகள் மத்திய அரசுக்கு வந்திருப்பதாகவும், அவை பரிசீலிக்கப்படுவ தாகவும் நமக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே இவை களெல்லாம் நிதானமாக பொருத்திருந்துதான் செய்ய வேண்டும்.

Sub-Treasury for Pallipat

* 332 Q.—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to have a Sub-Treasury at Pallipat in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, பள்ளிப் பட்டில் உள்ளவர்கள் 24 மைல்களுக்கப்பாலுள்ள திருத்தணிக்குச் செல்ல வேண்டியிருப்பதால், பள்ளிப்பட்டிலேயே ஒரு சப்-ட்ரெஷரி அமைக்க விரைவில் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணிக்கும் பள்ளிப்பட்டுக்கும் இடையே உள்ள தூரத்தை விளக்கிச் சொன்னதற்கு நன்றி, திருத்தணியில்

பணிச்சுமை அதிகமாக இல்லை என்ற குறை இருப்பதால், அதற்கு 24 மைல் இன்னொரு சப்-ட்ரெஷரி இருப்பது அவ்வளவு அவசியம் இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

மதுவிலக்குக்குத் தனித்துறை

*333 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுவிலக்கு ஒத்திவைப்புச் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தனி இலாகா அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுவிலக்கு ஒத்திவைப்பு சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க தலைமைச் செயலகத்தில் புதியதாக ஆயத் தீர்வை-மதுவிலக்கு என்ற ஒரு துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தவிர வேறு துறை அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

திரு. எம். தேவராசன் : மது விலக்கை ஒத்திவைத்தது நல்லது தான் என்றாலும், மதுவுக்குப் பதிலாக இன்னும் வார்னிஷைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மதுவின் விலை அதிகமாக இருப்பதால் இப்படி வார்னிஷைக் குடிப்பதாகக் கூறுகிறார்களே அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில பேருக்கு அதிகக் காரம் தேவைப்படுவதால் அப்படிப்பட்ட முயற்சிகளில் இறங்கு கிறார்கள் என்கிற தகவல்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட வர்கள் வீணாக அதுபோன்ற போதைப் பொருட்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொண்டு விரைவிலே அழிந்து போவதைத் தடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் அறிவுரை வழங்குவது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் இன்றைக்கு அவைக்கு வர இயலாததால் அவருடைய கேள்விகள் தள்ளி வைக்கப்படுகின்றன. அடுத்து, 334 எண்ணுள்ள கேள்வி எடுத்துக் கொள்ளப்படுகிறது.